**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.391/2022 P.W.6**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சித்தார்த் | த–பெ | ஜெயச்சந்திரன் |
| ஊர்: | : | தஞ்சாவூர் | | |
| வயது: | : | 35/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | உதவி மருத்துவர் | மாவட்டம் | தஞ்சாவூர் |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.12.2025**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் காணொலி காட்சி வாயிலாக ஆஜர். சாட்சி கும்பகோணம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள காணொலிகாட்சி அறையில் இருந்து சாட்சியம் அளித்தார்.**

---

முதல் விசாரணை.

நான் தற்சமயம் தஞ்சாவூரில் வசித்து முருக்கங்குடியில் அரசு மருத்துவமனையில் நிலைய மருத்துவ அதிகாரியாக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு காரைக்குடி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக 12.01.2016 அன்று மதியம் 13.40 மணிக்கு பணியில் இருந்த போது காரைக்குடி நாச்சியார் தெருவை சேர்ந்த கவிப்பிரியா 34 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரை அவருடைய தோழி அமுதா என்பவர் சிகிச்சைக்காக அவரை அழைத்து வந்தார். அவருக்கு முதல் உதவி சிகிச்சை செய்து உள் நோயாளியாக அவரை அனுமதித்த போது அன்றைய தினம் இனம் தெரிந்த நபர் ஒருவரால் துடைப்பம் மற்றும் கம்பு ஆகியவற்றை கொண்டு தன்னை தக்கியதாக சொன்னதன் அடிப்படையில் அவரை சிகிச்சைக்காக அனுமதித்தேன். மேலும் அவருடைய இடது கையில் 3 x 1 செ.மீ அளவுள்ள சிறாய்ப்பு காயம் இருந்தது அவருடைய வலதுபுற மூக்கு பகுதியில் ஒரு சிறாய்ப்பு காயம் 1 x 1 செ.மீ அளவில் இருந்தது. இடதுபுற Scalp பகுதியில் 3 x 5 செ.மீ அளவிற்கான காயங்கள் தென்பட்டது. மேலும் அந்த நபருக்கு சிகிச்சை அளித்து 18.01.2016 வரை அவர் சிகிச்சை பெற்றார். மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயமானது சாதாரன வகையை சேர்ந்தது என்று நான் சான்று அளித்தேன். **விபத்து பதிவேடுடன் கூடிய காய சான்றிதழ் அ.சா.ஆ.3**. இந்த வழக்கு சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

12.01.2016 அன்று என்னிடம் கவிப்பிரியா என்ற பெண் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டாரா என்றால் சரிதான். அவருக்கு எந்த காயங்களுக்காக என்னை அனுகினார் என்றால் காயம் பட்ட காரணத்திற்காக மருத்துவ உதவிக்காக என்னை

அனுகினார். இது தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார் என்றால் சரிதான். மேற்படி காயம் சாதாரன வகை காயம் என்று நான் சான்று அளித்தேனா என்றால் சரிதான். ஒருவர் தானாக கீழே விழுந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது. மேற்படி காயம் சாதாரன வகை என்று சான்று அளித்த போது ஏன் காயம் பட்டவர் 7 நாட்கள் அனுமதிக்கப்பட்டு உள்நோயாளிகா சிகிச்சையில் இருந்தார் என்றால் அவருக்கு நோய் எதிர்ப்பு சக்தி உண்டாவதற்கான சிகிச்சை மற்றும் மருந்துகள் அளிக்கப்பட்டதால் அவர் உள்நோயாளியாக இருந்தார். நோய் எதிர்ப்பு சக்திக்கு நான் கொடுத்த மருந்திற்கும் ஆண்டிபயாட்டிக்கிற்கும் தொடர்பு உள்ளதா என்றால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் மூலம் மேலும் உடல் நிலை சரியில்லாமல் போவதை தடுப்பதற்காக சிகிச்சை அளிக்கப்பட்டது. காயத்தின் தன்மை சிறாய்ப்பு காயங்கள் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.12.10 09:54:44 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.